முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தாயுமானசுவாமிகள் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.04.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **கருணை கொண்டு கலியுகத்தில்**
**காக்கும் சக்தியாக வந்த அரங்கா**
**ஆறுமுகனாரின் அவதாரமாக வந்த**
**அண்ணலே அருள்மிகு தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
ஆசிபட **விகாரி தகரின் திங்கள்**
**அறிவிக்க அட்டமதிகதி கதிர் வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிற்றுக்கிழமை)**
3. வாரமதில் தாயுமான சுவாமிகள் யானும்
வழங்குவேன் உலகோர் நலம் பெற
சோரமிலா நல்லுலகம் தன்னை
சுத்தநெறி கொண்டு உருவாக்கும்
4. உருவாக்கும் ஞானியே அரங்கா
உண்மை ஆன்மீக வளர்த்து
குருவருள் கொண்டு மக்களை
குறையிலா வழிநடத்தி மீட்க
5. மீட்க சக்தியாக வந்த அரங்கா
முழுமை பெற்ற கலிகால ஞானியே
ஆட்சி நிலை கொண்டவர்களும்
அதிகார வர்க்கங்களும் உன்னை
6. உன்னை அணுகி ஆசி தீட்சை
உயர் தருமத்தில் உதவி அடைந்து
மண்ணுலகில் சைவநெறி தொடர
மகத்தான வெற்றியும் மாற்றமும்
7. மாற்றமும் கண்டு சிறக்கும்
மண்ணுலகே ஞானபலம் பெறும்
ஆற்றலாக அரங்கன் சீடர்கள்
அகிலமெங்கும் சேவையாக அணுகி
8. அணுகி அரங்கன் புகழ் பரப்பி
அறத்தை வளர்க்கும் நோக்கில்
அணுகி சேவை ஆற்றிட
அன்பர்களே உதவி நின்றுமே
9. நின்றுமே அரங்கன் தருமத்தில்
நிலைபட உதவி துணைபட
நன்றான வளமும் பலமும்
ஞானவான்கள் ஆசியும் கிட்டி

10. கிட்டியே இந்த கலியுகம்
குறையிலா தரும யுகமாகும்
தட்டாது மாற்றங்கள் தானும்
தவராசன் துணைபட நடக்கும்

11. நடக்கும் சடுதி பெருமாற்றம்
ஞான ஆண்டாம் இந்த விகாரியுள்
இடரின்றி அகிலமே பாதுகாப்புறும்
இயம்பிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் தாயுமானசுவாமிகள் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லாது தாயினும் மிக்க கருணை கொண்டு இந்த துன்பம்மிக்க கலியுகத்தினில் துன்பப்படுகின்ற மக்களை காக்கின்ற மகா சக்தியாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா ஞானியே, யுகமாற்ற தலைவனே, அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 8ம் நாள் 21.04.2019, ஞாயிற்றுக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே தாயுமானசுவாமிகள் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தாயுமானசுவாமிகள்.

குற்றமற்ற நல்லுலகத்தினை ஞானஉலகமாக சுத்தநெறி கொண்டு உருவாக்குகின்ற முருகப்பெருமானின் அவதார ஞானியே அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் உண்மை ஆன்மீகத்தினை வளர்த்து குருவருள் கொண்டு மக்களை குறையின்றி வழிநடத்தி அவர்களை பாவங்களில் இருந்து மீட்டும் கலியுக துன்பங்களில் இருந்து மீட்டும் காத்திடவே இவ்வுலகின் மகா சக்தியாக வந்திட்ட கலியுக மகா ஞானியே அரங்கமகா தேசிகனே முழுமைபெற்ற கலியுக ஞானியே உம்மை ஆட்சியில் உள்ள ஆட்சியாளர்களும், அதிகாரத்தில் உள்ள அதிகாரிகளும் பயபக்தியுடன் அணுகி உமது திருவடி பணிந்து தீட்சை உபதேசம் அடைந்து தாம் நடத்தும் மாபெரும் தானதருமங்களிலே பொருளுதவிகள் செய்து வர வேண்டும்.

இவ்விதமே உலகோர் உம்மை பணிந்து தீட்சை உபதேசம் பெற்று தாம் கூறும் ஜென்மத்தைக் கடைத்தேற்றி ஞானியாக்கவல்ல தூயநெறியினை உளமார ஏற்றுக் கொண்டு உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவநெறியில் உம்மை பின்தொடர்ந்து வரவர, இவ்வுலகம் மகத்தான முறையில் மாற்றமடைந்து சகலவிதங்களிலும் வெற்றி பெற்று சிறப்பான உலகமாக மாறிடும். இவ்வுலகம் ஞானபலம் பெற்று ஞானஉலகமாக ஆகிடும்.

இந்த உலகம் ஞானஉலகமாக ஆகிட வேண்டுமென்றே தன்னலமற்று ஆற்றலுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உத்தம சீடர்கள் உலகமெங்கும் பெரும் சேவையாக பரவி மக்களை அணுகி அரங்கனின் புகழினை மக்களிடத்து எடுத்துக் கூறி புகழ் பரப்பி வருவதோடு உலகமெங்கும் தர்மபலத்தினை பெருக்கும்விதமாக அறத்தினை வளர்க்கும் நோக்கத்தில் பெரும் சேவைகளை தளராது செய்து வருகின்றனர்.

ஆதலினால் அன்பர்களே உங்களை நோக்கி வருகின்ற அரங்கனின் தொண்டர்களுக்கு உதவியாய் நின்று செயல்பட்டு அரங்கரின் தர்மத்தில் பங்கு பெறும்விதமாக பொருளுதவிகள் செய்து அறம் வளர துணையாய் நின்று செயல்படுங்கள். உங்களுக்கு ஞானவான்கள் ஆசியும் அருளும் கிடைக்கப் பெற்று இந்த கலியுகமே குறைவற்ற தர்மயுகமாக ஞானிகளால் மாற்றம் அடையும்.

**உலகினில் இனி தடையின்றி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக மாற்றங்கள் விரைந்து நடக்கப் போகின்றது. ஞானஆண்டாம் இந்த விகாரி ஆண்டினிலே உலகமே ஞானிகள் அருளால் முழு பாதுகாப்பை பெற்றிடும்** எனக் கூறுகிறார் மகான் தாயுமானசுவாமிகள்.

–சுபம்–